Koviloor Digital Library

தஞ்சாவூர் ஜில்லா நன்னிலம் நகரில் சமாதியாலய[illegible]

ஸ்ரீ நாராயண ஸ்வாமிகள் தாண்டவராய ஸ்வாமிகளின் சரித்திரக்குறிப்புகளும், வேண்டுகோளும்.

சரித்திரக் குறிப்புகள்.

1. சமாதிகள் உள்ள இடம் : நன்னிலம் ஸ்ரீ விநாயகர் கோவில் தெற்குத்தெரு (பூர்வம் இருப்பைத்தோப்பு).

2. சமாதியடைந்தவரின் பெயர் : சமாதிகள் இரண்டில் தென்புறமுள்ளது ஸ்ரீ நாராயண ஸ்வாமிகள்.

ஜன்ம ஸ்தலம் : நன்னிலம்.

ஜன்ம காலம் : கலியுகாதி 4480ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1378) காளயுக்தி வருடம்.

மரபு : (வாத்திம) அந்தணர்.

குருவையடைந்த காலம் : கலியுகாதி 4501 ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1399) பிரமாதி வருடம்.

குரு : ஸ்ரீ ஜகத்குரு வித்தியாரண்ணிய சங்கராச்சாரிய ஸ்வாமிகள்.

செயல் : சர்வ துக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்தியடைந்ததும், அடைவித்ததும் அதற்குச் சாதனமான சர்வ வேதாந்த சார வடிவ கைவல்லிய நவநீத ஞானநூல் இயற்றும்படி தம் பிரதம சீடரான ஸ்ரீ தாண்டவராய ஸ்வாமிகட்கு அருளியதும்.

சமாதியான காலம் : கலியுகாதி 4551 ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1449) சுக்கில வருடம் வைகாசி மாதம் விசாக நட்சத்திரம்.

வடபுறமுள்ள சமாதி : ஸ்ரீ தாண்டவராய ஸ்வாமிகள்.

ஜன்ம ஸ்தலம் : நன்னிலம்.

ஜன்ம காலம் : கலியுகாதி 4510 ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1409) சர்வதாரி வருடம்.

மரபு : (வாத்திம) அந்தணர்.

குருவையடைந்த காலம் : கலியுகாதி 4526 ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1424) குரோதி வருடம்.

குரு : (மேற்கூறிய) ஸ்ரீ நாராயண ஸ்வாமிகள்.

செயல் : சர்வ துக்கநிவிர்த்தி பரமானந்தப் பிராப்தியடைந்ததும், அடைவித்ததும், குருவின் ஆக்ஞையின்படி சர்வதுக்க நிவிர்த்தி பரமானந்தப் பிராப்திக்குச் சாதனமாய், சர்வ வேதாந்த சாரத்தையும் எளிதில் உணரத்தக்க முறையினதாய், வேதாந்த நூல்களின் சிரோமணி போன்றதாய் உலகம் போற்றுவதாய் உள்ள கைவல்லிய நவநீதம் என்னும் ஞான நூலினைத் தமிழ்க்கவிகளினால் இயற்றியதும் ஆம்.

(குறிப்பு : கைவல்லிய நவநீத ஞான நூலின் அருமை பெருமையுற்ற முறைமையினைப் பல நாட்டவர்களுமறிந்து சமஸ்கிருதம், தெலுங்கு, மலையாளம், ஆங்கிலம், ஜெர்மனி முதலிய பாஷைகளில் மொழிபெயர்ப்புச் செய்து அவ்வந்நாடுகளிற் பயின்று வருகின்றனர் என்பது உலகப்பிரசித்தம்)

சமாதியான காலம் : கலியுகாதி 4686ஆம் ஆண்டு (ஆங்கிலம் கி. பி. 1584) ஜயவருடம் வைகாசி மாதம் விசாக நட்சத்திரம். (குறிப்பு : தம்குரு வைகாசி விசாகத்தில் விதேக முக்தியடைந்தது போன்றே தம்விதேக முக்தியும் வைகாசி விசாகத்தில் நிகழக்கடவது என்று சங்கற்பித்து அவ்வாறடைந்தனர் என்பது சரித்திரம்.)

3. சமாதியின்மேல் பிரதிஷ்டை : சிவலிங்கம்.

4. பூஜா காலங்கள் : இரண்டு அதாவது பகல் இரவு.

5. குருபூஜா காலமும் நிகழ்ச்சியும் : வைகாசி மாதம் விசாக நட்சத்திரம். விசேட அபிஷேக அலங்கார ஆராதனைகளும், பிரசாதம் வழங்கப்பெறுதலும்.

வேண்டுகோள்.

மேற்படி சமாதியாலயங்கள் மிகவும் ஜீரணமடைந்தும், பூஜைக்குரிய பண்டு இல்லாமலும் இருப்பதால் ஜீரணோத்தாரணம் செய்து நித்தியநைமித்திய பூஜைகள் சிறப்பாக நடைபெறச்செய்வது மிகுந்த புண்ணியகைங்கரியமாயும் மனிதராகத்தோன்றிய ஒவ்வொருவரும் தலைசிறந்த கடமையாகக் கருதிச் செய்யவேண்டியதாகவும் இருப்பதினால் இதனைக்கண்ணுறும் அன்பர்கள் ஒவ்வொருவரும் தங்கள் தங்களாலியன்ற நன்கொடை வழங்கியும் உடனிருந்து பூர்த்தியுற நடைபெறச் செய்தும் அதனாலுறும் இம்மை மறுமைப் பயன்களை எய்துமாறு வேண்டுகின்றேன்.

ஸ்ரீநாராயண தாண்டவராய ஸ்வாமிகள் மடம்
நன்னிலம்

இங்ஙனம்
கோவிலூர் மரபு, ஸ்ரீமத் கோவிந்தஸ்வாமி.
[illegible]

Acc. No. 265151 [illegible]

Koviloor Digital Library





[illegible]

ஸ்ரீ நாராயண ஸ்வாமிகள் தாண்டவராய ஸ்வாமிகள்

சமாதியாலய [illegible] பத்திரிகை.

ஸ்ரீ நாராயண ஸ்வாமிகள் தாண்டவராய ஸ்வாமிகள் துதி.

[illegible]

[illegible]

[illegible]

கைவல்லிய நவநீதத்தில் [illegible] நாராயண ஸ்வாமிகளைத் [illegible]

[illegible]

இங்ஙனம்:

கோவிலூர் மடம்,

மகா. கோவிந்த ஸ்வாமி.

[illegible] ஸ்ரீ நாராயண தாண்டவராய ஸ்வாமிகள் மடம்,

[illegible]

ஸ்ரீ நாராயண தாண்டவராய ஸ்வாமிகள் மடம்,

[illegible]

15—1—1959